

தமிழகமும் கலைமாமணியும்

- பராசரியர்

கழகமும் கலைஞரும்

பேராசிரியர்

வெளியீடு:.
தி.மு.க. இளைஞர் அணி
அன்பகம்
சென்னை - 600 018.

முதற்பதிப்பு: நவம்பர், 1993.

விலை ரூ.2/=

அச்சிட்டோர்:

ரவி டிரேடிங் கார்ப்பரேஷன்
பிரிண்டிங் பிரஸ்
183, டாக்டர் நடேசன் சாலை,
சென்னை - 600 005. போன்: 84 28 16

இந்நூல்....

1993 அக்டோபர் 24 அன்று
விழுப்புரத்தில் நடைபெற்ற
முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்
கழகப் பொதுச் செயலாளர்
இனமான பேராசிரியர் பெருந்தகை
அவர்கள் ஆற்றிய உரையினை
''கழகமும் கலைஞரும்'' என்கிற
தலைப்பில் தி.மு.க. இளைஞர் அணி
சார்பில் இந்நூல் வடிவில்
பெருமையுடன் வெளியிடுகிறோம்.

— தி.மு.க. இளைஞர் அணி.

விழுப்புரத்தில் நடைபெற்ற முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில் கழகப் பொதுச் செயலாளர் பேராசிரியர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

இந்த விழுப்புரம் நகரில் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து இதில் உரையாற்ற வாய்ப்பு அளித்தமைக்கு மிக்க மகிழ்ச் சியடைவதோடு, கூட்டத்திற்கு ஏற்பாடு செய்த நகரக் கழக நிர் வாகிகளைப் பாராட்டுகிறேன்.

நான் சமீபத்தில் நடைபெற்ற இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் இருந்த போது தம்பி பொன்முடி விழுப்புரம் நகரத்தின் சார்பில் நடைபெறும் முப்பெரும்விழாப் பொதுக்கூட்டத்தில் தாங்கள் கலந்து கொள்ள வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான், இடைத்தேர்தல் நடைபெற்று அதில் நாம் வெற்றி பெறுவோம். எனவே அந்த வெற்றி விழாவை விழுப்புரத்தில் வைத்துக் கொள்ளலாம் என்று கூறினேன். ஆனால் பழனியிலும், இரா ணிப்பேட்டையிலும் தோல்வியடைந்தோம். இங்கே சம்பத் பேசும் போது தி.மு.கழகம் தோற்று விட்டது, தோற்று விட்டது என்று உணர்ச்சி மயமாகக் குறிப்பிட்டார். நாம் தோற்கவில்லை, வெற்றிதான் பெற்றிருக்கிறோம்.

அவர் எதை எண்ணிக் கொண்டு தோற்றோம் என்று சொல் கிறார் என்றால் தேர்தல் முடிவிலே அ.தி.மு.க. வெற்றி பெற்றுள் ளது என்று சொன்னார்களே, அதைச் சொல்கிறார்.

ராணிப்பேட்டையில் ரூ.10 கோடி
பழனியில் ரூ.25 கோடி

ஆனால் தி.மு.கழகம் முன்பு எந்த நிலையில் வீழ்த்தப்பட்டி ருந்ததோ அந்த நிலையில் இருந்து பார்த்தால், நாம் பெற்றிருப் பது பழனியிலும் மகத்தான வெற்றி, ராணிப்பேட்டையிலும் மகத்தான வெற்றி. ஒரே வித்தியாசம் நம்முடைய நாடாளு மன்ற, சட்டமன்ற வேட்பாளர்கள் நாடாளுமன்றத்திற்கோ, சட் டமன்றத்திற்கோ போக மாட்டார்கள். அவ்வளவுதான். அப்ப டிப் போகாத காரணத்தால் ஒன்றும் இழப்பல்ல. அவர்களிடத்

தில் அடி வாங்குவதுதான் மிச்சம். ஆகவே அவர்கள் போகாத தால் ஒன்றும் இழப்பல்ல. ஆனால் பழனியிலே கேட்டாலும் சரி, ராணிப் பேட்டையிலே கேட்டாலும் சரி, தி.மு.கழகத்தைத் தான் மக்கள் ஆதரிக்கிறார்கள். ஆனால் எதிர்பாராத வகையில் கோடிக் கணக்கிலே பணத்தைக் கொட்டி வாக்குகளை வாங்கி யுள்ளனர். முதலமைச்சர் ஜெயலலிதா சார்பில் கிட்டத்தட்ட 10 கோடி அளவு ராணிப்பேட்டையிலேயே செலவிடப்பட்டதாக அவர்களே தெரிவிக்கிறார்கள். பழனி தொகுதியிலே ஏறக்கு றைய 25 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டுள்ளது.

இப்படிச் செலவழித்துத்தான் வெற்றி பெற்றார்களே தவிர, முறைகேடாக, சட்டவிரோதமாக அமைச்சர்களெல்லாம் அங் கேயே தங்கியிருந்து இந்தத் தேர்தலிலே வெற்றி பெற்றார்களே தவிர அது மக்கள் தந்த உண்மையான வெற்றி அல்ல.

மக்கள் ஆதரவு பெற்ற கட்சி
தி.மு.க.கழகம்

மக்களுடைய மனப்பூர்வமான ஆதரவைப் பெற்ற கட்சி என்ற முறையில் தி.மு.கழகம் பெற்றுள்ள வாக்குகளை நீங்கள் ஒப்பிட்டுப் பார்ப்பீர்களேயானால், மக்களுடைய பேராதரவு பெற்ற கட்சியாக தி.மு.கழகம் உயர்ந்திருப்பது உங்களுக்கே தெரியும்.

எனக்கு முன்னால் பேசிய நண்பர்கள் சொன்னதைப் போல தி.மு.கழகம் ஒரு பாரம்பரியம் உள்ள இயக்கம். பாரம்பரி யத்தை காப்பாற்றுகிற இயக்கம். ஒரு லட்சியமுள்ள இயக்கம். லட்சியத்திற்காக வாழ்கிறவர்களை ஏராளமாக பெற்றிருக்கிற இயக்கம். தமிழுக்காக குரல் கொடுக்கிற இயக்கம். தமிழுக்கா கவே பல கொடுமைகளை ஏற்றுக் கொண்ட இயக்கம். தென்ன கத்தினுடைய உரிமைக்காக குரல் கொடுக்கிற இயக்கம். அப்படி உரிமைக்கு குரல் கொடுத்தே தமிழ்நாட்டுக்கு உரிமைகளைப் பெற்றுத் தந்த இயக்கம்.

நமது லட்சியத்தைக் காப்பாற்ற
உறுதி எடுக்கும் விழா

தாழ்த்தப்பட்ட, பின்தங்கியவர்களுக்காக பாடுபடுகிற இயக்கம். இஸ்லாமியர்களுக்காக, கிறிஸ்தவர்களுக்காக, சிறு

பான்மையினருக்காக அவர்களின் உரிமையைக் காப்பாற்ற என் றைக்கும் போராடுகிற இயக்கம். எனவே அப்படிப்பட்ட பாரம் பரியமுள்ள இந்த இயக்கத்தினுடைய முப்பெரும்விழா என்பது நமது லட்சியத்தை காப்பாற்றுவதற்கு உறுதி எடுத்துக் கொள்கிற ஒரு நாளாகத்தான் நமக்கு வாய்த்திருக்கிறது என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

இங்கே நண்பர்கள் சொன்னார்கள் - குறிப்பாக பொன்முடி சொன்னார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொன்முடி பயில்வதற்கு வந்து, அங்கே உள்ள மாணவர்களோடு சேர்ந்து, மாணவர் இயக்கம் தொடங்கி பணியாற்றத் தொடங்குவதற்கு முன்னால், ஏறத்தாழ 25 ஆண்டுகளுக்கு முன்பே அண்ணாம லைப் பல்கலைக் கழகத்தில் படித்தவன் நான் என்று சொன்னார். அதற்கும் 5, 6 ஆண்டுகளுக்கும் முன்பே பெரியாருடைய பள்ளிக் கூடத்திலே படித்தவன் நான். பல்கலைக் கழகத்தில் சேர்வதற்கு முன்பே பேரறிஞர் அண்ணாவின் கல்லூரியிலே சேர்ந்தவன் நான். இன்னும் சொல்லப் போனால், புகழேந்தியின் தந்தை இளம்வழுதி அந்தக் கல்லூரியிலே சேர்வதற்கு முன்னால், அங்கே சேர்ந்து மாணவர் இயக்கம் நடத்தியவன் நான். இன்னும் சொல்லப் போனால் திராவிடர் கழகம் தோன்றுவதற்கு முன் னரே அந்த இயக்கத்தில் சேர்ந்தவன் நான்.

பெருமைக்காகச் சொல்லவில்லை

திராவிடர் கழகம் என்று பெயர் வைப்பதற்கு முன்னால் நீதிக்கட்சியினுடைய சார்போடு சுயமரியாதை இயக்கத்தினு டைய தொண்டனாக, மாணவனாக என்னுடைய உணர்வுகளை இணைத்துக் கொண்டவன் நான். நாவலர் நெடுஞ்செழியன் பேச வருவதற்கும், துணிவதற்கும் காரணமாக இருந்தவன் நான். பெருமைக்காகச் சொல்லவில்லை. வரலாற்றுக்காகச் சொல்கி றேன். 1942-வது ஆண்டு அதாவது 50 ஆண்டுகளுக்கு முன்னால் பண்ருட்டிக்குப் பக்கத்திலே இருக்கிற புதுப்பேட்டை. அந்தப் புதுப்பேட்டையிலே பண்ருட்டிமணி, வரதன் போன்ற வய திலே மூத்த தோழர்கள் பலர் மாணவர்களாக இருந்த காலம். அங்கே திராவிட மாணவர் மாநாடு. அதாவது திராவிடர் கழகம் தோன்றுவதற்கு முன்னால். 1944-ஆம் ஆண்டு இறுதியிலே திரா விடர் கழகம் தோன்றியது என்றால் அதற்கு முன்பு இரண்டு

ஆண்டுகளுக்கு முன்னால் நடைபெற்ற அந்த மாநாட்டிற்கு நான் தான் தலைவர். அந்த மாநாட்டைத் திறந்து வைத்தவர் தந்தை பெரியார், அந்த மாநாட்டில் பேரறிஞர் அண்ணா, ஈ.வி.கே. சம்பத், ஏ.பி.ஜனார்த்தனம், விழுப்புரத்தின் முன்னாள் நகர் மன்றத் தலைவர் கோவிந்தராஜலு நாயுடு என்ற பெரியவர் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள். அப்பொழுது எடுத்த நிழல் படத்தைக் கூட ஓராண்டுக்கு முன்புதான் புதுப்பேட்டை தோழர்கள் நினைவுச் சின்னமாக என்னிடத்திலே வழங்கினார்கள்.

தமிழுக்காக - தமிழருக்காக அண்ணாவால் உருவாக்கப்பட்டது

நான் அதை ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் 1942-ல் நான் அந்த மாநாட்டில் கலந்து கொண்டபோது, அந்தப் படத்திலே முன் வரிசையிலே வீற்றிருக்கிற தலைவர்களில் என்னைத் தவிர யாருமில்லை. பெரியார் இல்லை. அண்ணா இல்லை. தோழர் சம்பத் இல்லை. தோழர் ஏ.பி.ஜனார்த்தனம் இல்லை. பெரியவர் கோவிந்தராஜுலு இருக்கவில்லை. நான் இருக்கிறேன் - நான் இருப்பேன். இன்னும் சொல்லப் போனால் எவர் போனாலும் எவர் வந்தாலும் நான் என்றைக்கும் கழகத்தில் இருப்பேன். அது எனக்காக அல்ல, அது கலைஞருக்காக அல்ல. தனிப்பட்ட யாருக்காகவும் அல்ல.

தி.மு.கழகம் என்பதொரு தனி பாரம்பரியமுள்ள இயக்கம். நானே அறிஞர் அண்ணாவோடு சேர்ந்து அப்படியொரு இயக்கம் தேவை என்று விரும்புகின்ற காலக்கட்டத்தில், பலரும் விரும்பியபடி அறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்ட இயக்கம். நான் ஆசைப்பட்டேன். அண்ணா உருவாக்கித்தந்தார். அப்படி உருவாக்கப்பட்ட இயக்கம். அறிஞர் அண்ணாவுக்காக உருவாக்கப்பட்ட இயக்கம் அல்ல. தமிழுக்காக, தமிழ் நாட்டுக்காக, தமிழ் இனத்திற்காக, தந்தை பெரியார் ஊட்டிய உணர்வு தமிழ் நாட்டில் நடைமுறையில் வெற்றி பெறுவதற்காக, பெரியாரால் வளர்க்கப்பட்ட சமூக சீர்திருத்தத் திட்டங்கள் தமிழ் நாட்டிலே சட்ட மன்றத்திலே நிறைவேறுவதற்காக, தமிழ் நாட்டு அரசியலைத் தெளிவு படுத்துவதற்காக, தமிழ் நாட்டிலே வாழ்கிற மக்களைத் தலை நிமிர்ந்து வாழவைப்பதற்காகச் செயற்படும் ஒரு

மக்கள் இயக்கமாக, தி.மு.க.கழகம் அறிஞர் அண்ணா அவர்களால், துவங்கப்பட்டது.

தலைமைப் பதவி வேண்டும் என்பதற்காக அல்ல

அறிஞர் அண்ணா அவர்கள் தனக்கு ஒரு தலைமைப்பதவி வேண்டும் என்பதற்காக ஆசைப்பட்டு அல்ல.

நான் இன்றைக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அறிஞர் அண்ணா அவர்கள் எளிதாக யாரையும் போற்றி, பாராட்டி விட மாட்டார். அன்பு காட்டுவார்கள். ஆதரவு காட்டுவார்கள். ஆனால் எல்லோரையும், எல்லா நேரத்திலேயும் முழு அளவிற்கு உயர்த்திவிட்டு அதன் மூலமாக மற்றவர்கள் வருத்தப்படுவதற்கு இடம் தரமாட்டார்கள். ஆனாலும் கூட மதிக்க வேண்டியவரை மதிப்பார்கள். எடுத்துச் சொல்ல வேண்டிய உண்மையை உரிய நேரத்திலே எடுத்துச் சொல்வார்கள்.

தனக்குப்பின் கலைஞரை பேச அண்ணா கட்டளையிட்டார்!

அறிஞர் அண்ணாவிற்கு நான் அன்புக்குரிய தம்பியாகத் தான் இருந்தேன். அவர் என்னை நண்பராகக்கூட சில நேரத்திலே சொல்லிவிடுவார். இருந்தாலும்கூட அவரைவிட நான் 14 வயது இளைஞன். நெடுஞ்செழியன் 12 வயது இளைஞர். கலைஞர் 16 வயது இளைஞர். ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் ஒரு பத்தாண்டு காலம் தி.மு.கழகத்தை முன்னின்று நடத்தி வருகிற காலக்கட்டத்தில் கலைஞருடைய உழைப்பு, அவருடைய எழுத்து, அவருடைய தொண்டு, அவரது தியாகம், அவருடைய அறிவுக் கூர்மை, அவரது சட்டமன்ற வாதத்திறன், அவர் எழுதி வருகிற ஏடுகளின் சிறப்பு இவைகளையெல்லாம் கருதிப் பார்த்த காரணத்தால், மன்னையிலே நடைபெற்ற கூட்டத்தில் - மன்னை நாராயணசாமி அவர்கள் நடத்திய அந்தக் கூட்டத்தில், அறிஞர் அண்ணா கலந்து கொண்டு பேசிவிட்டு உடனே குடந்தைக்கு அல்லது தஞ்சைக்குச் சென்று ரயிலேறி சென்னை சேர வேண்டிய நிலைமை காரணமாக, தனக்குப் பின்னாலே அமர்ந்திருந்த கலைஞரை அழைத்து "கருணாநிதி எனக்குப் பின்னாலே நீ பேசு" என்று கட்டளையிட்டார்.

பிற்பகுதி வரலாற்றை தம்பி கருணாநிதி வரைய இருக்கிறார்

கலைஞர், அறிஞர் அண்ணா அவர்களைப் பார்த்து, ''நீங்கள் பேசியதற்குப் பின்னர் யார் இருப்பார்கள். நான் எப்படிப் பேச முடியும். உங்களுக்குப் பின் நான் பேச முடியுமா? நீங்கள் தான் அண்ணா இறுதியில் பேச வேண்டும். சில நிமிடங்கள் வேண்டுமானால் நான் பேசுகிறேன்'' என்று கூற, ''இல்லை கருணாநிதி நீ பின்னால் பேசு; உன்னை பேசவைத்து, இந்த மக்களை நான் கேட்க வைப்பேன்'' என்று சொல்லிவிட்டு, தான் பேசுகிற போது அண்ணா அவர்கள் சொன்னார்கள். இதை மன்னை அவர்கள் அவ்வப்போது எனக்கு நினைவூட்டுவார்கள். அறிஞர் அண்ணா சொன்னார், ''நான் உடனடியாகப் புறப்பட வேண்டிய காரணத்தால் முன்னால் பேசுகிறேன். நான் என் உரையை முடித்ததற்குப் பின்னர் தம்பி கருணாநிதியை நான் பேசக் கேட்டுக் கொண்டிருக்கிறேன். இந்த இயக்கத்தினுடைய முதல் பகுதி வரலாற்றை நான் வரைந்திருக்கிறேன். அதனுடைய பிற்பகுதியை என்னுடைய தம்பி கருணாநிதி வரைய இருக்கிறார்'' என்று சொன்னார். அர்த்தம் தெரிந்தவன் அதனுடைய சிறப்பை உணர்ந்து கொள்ளலாம். அர்த்தமே தெரியாதவர்களுக்கு நான் அறிவுறுத்த முடியாது.

அன்பழகனைப் பிடிக்காதா? நான் என்ன சம்பத்தா?

''தி.மு.கழகத்தினுடைய வரலாற்றில் முற்பகுதியை நான் வரைந்திருக்கிறேன். அதனுடைய பிற்பகுதி வரலாற்றைத் தம்பி கருணாநிதி வரைவான். அவனுடைய உரையை நீங்கள் கேளுங்கள்'' என்று அண்ணா சொன்னார். அன்பழகனை அறிஞர் அண்ணாவுக்குப் பிடிக்காதா? நான் என்ன சம்பத்தா. அன்பழகனிடத்திலே வைக்காத நம்பிக்கையை வேறு யாரிடத்திலாவது வைத்திருந்தாரா? நான் எப்பொழுதாவது அரசியலில் எதற்காகவாவது அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே ஒன்றைக் கேட்டதுண்டா? கிடைக்கவில்லை என்று வருந்தியது உண்டா? அறிஞர் அண்ணா என்மீது வருத்தப்படும் படியாக நான் எந்தக் காலத்திலாவது நடந்து கொண்டது உண்டா?

ஆனால் அறிஞர் அண்ணா அவர்கள் இந்த அன்பழகனைச் சொல்லவில்லை. அந்தக் கருணாநிதியைச் சொல்லி வைத்தார்.

என்னுடன் உரிமையோடு ஆசையுடன்
அண்ணா பழகினார்

ஏன் கலைஞரைச் சொன்னார்? அன்பழகனைவிட கருணா நிதியிடத்திலே ஆசை என்று கூடச் சொல்ல முடியாது. இரவு 12 மணி. 1 மணிக்கு அண்ணா அவர்கள் எங்காவது போய் நிகழ்ச்சி யிலே கலந்து கொண்டு விட்டு வந்தால் கூட நான் சொல்கிறேன் உண்மையைச் சொல்கிறேன் - என் வீட்டில் தவறி உணவிலே தண்ணீர் விட்டு விட்டால்கூட, அதற்குப் பின்னர் 2 ரொட்டி வாங்கி வந்து சாப்பிட்டு டீ குடித்துவிட்டுத் தூங்குகிற அளவிற்கு உரிமையோடு இருந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்..

நான் உள்ளே வரும்போது 'வாருங்கள்' என்று சொன்ன தில்லை. வெளியிலே போகும் போது 'போய் வருகிறேன்' என்று அவர் சொல்லிக் கொண்டதில்லை. அவ்வளவு உரிமை யோடு அறிஞர் அண்ணா அவர்கள் என்னிடத்திலே பழகினார் கள். அதற்கும் ஒரு காரணம் அவர்கள் சொன்னார்கள், ''அன்பழ கன் வழவழவென்று பேசிக் கொண்டு இருக்க மாட்டார். இது ஒன்று. இரண்டாவது காரணம் எதையும் வெட்டு ஒன்று; துண்டு இரண்டு என்று எனக்குப் புரியவைப்பார். மூன்றாவது யாரைப் பற்றியும் புகார் சொல்ல மாட்டார்'' என்று. இன்றைக்கும் உங்க ளில் யாரைப் பற்றியும் நான் குறை சொல்லப் போவதில்லை. யார் மீதும் எனக்கு வருத்தமில்லை. எனக்கு எதிரி எவருமில்லை.

கழகத்திற்கு எவன் எதிரியோ
அவனெல்லாம் எனக்கும் எதிரி

ஆனால் தி.மு.கழகத்திற்கு எவன் எதிரியோ அவனெல் லாம் எனக்கும் எதிரி. தி.மு.கழகத்தை கட்டிக் காப்பாற்றுபவன் யாரோ அவர்களெல்லாம் என் கண்மணிகள். தி.மு.கழகத்தினு டைய தலைமை கலைஞருடைய கையிலே இருக்கிற காரணத் தால்தான் கழகம் இந்த அளவிற்கு நாட்டு மக்களுக்கு பணியாற்ற முடிகிறது என்னும் அந்த அடிப்படை உணர்வோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எனக்கென்று நான் யாரையும் வெறுக்

கக் காரணமில்லை. யாரையும் ஒழித்துவிட்டுப் பதவி பெற்றிட வேண்டிய நிலையில் நான் இல்லை. சிலபேர் ஒதுங்கிப் போன இடத்தில் நான் உட்கார்ந்திருக்கிறேனே தவிர வேறல்ல.

ஒருமுறை என்னுடைய நண்பர் ஒருவர் சொன்னார். ஏன் நீங்கள் கழகத்திலே பொருளாளர் பதவிக்கு நிற்கக் கூடாது என்று கேட்டார். இப்பொழுதல்ல, நான் சொல்வது எம்.ஜி.ஆர். பொருளாளர் ஆவதற்கு முன்னால், நான் சொன்னேன், ''பொருளுக்கும் எனக்கும் தொடர்பு கிடையாது. நான் பொருளாளராகி என்ன செய்யப் போகிறேன்'' என்று சொல்லி மறுத்துவிட்டேன்.

பொருளாளர் - பொதுச் செயலாளர்

எம்.ஜி.ஆர். பொருளாளரும் ஆனார். பங்குதாரரும் ஆனார். அந்தப் பொருளாளர் நீங்கிய காரணத்தால் கலைஞரும் நாவலரும் பார்த்து நீங்கள்தான் பொருளாளராக இருக்க வேண்டும் என்றனர். நான் கலைஞரிடத்திலே சொன்னேன், பொருளாளர் என்றால் உங்கள் மாதிரி நிதி திரட்டுவேன் என்று தயவு செய்து எதிர்பார்க்காதீர்கள். நெடுஞ்செழியன் மாதிரி கணக்குப் பார்க்கவும் எனக்குத் தெரியாது. எனவே இரண்டையும் நீங்களே பார்த்துக் கொள்வதானால் நான் பொருளாளராக இருக்கிறேன் என்று சொன்ன பிறகும், நீங்கள்தான் பொருளாளர் என்று சொல்லி, நான் பொருளாளராக ஆனேன்.

நாவலர் பார்த்தார். இன்னும் அன்பழகனை பொதுச் செயலாளர் ஆக்காமல் எப்படி இருப்பது என்று அவர் யோசித்தார். எம்.ஜி.ஆர். போனது போல நாமும் போனால்தான் அன்பழகன் பொதுச் செயலாளராகலாம் என்று அவரும் போனார். நான் பொதுச் செயலாளரானேன்.

கட்டுப்படாதவர்கள் இயக்கத்தில் பணியாற்ற முடியாமல் போயினர்

இனியாராவது போனால் அந்த இடம் எனக்குத்தான் என யாரையும் விரட்டி யாரோடும் போட்டியிட்டு அடைய வேண்டியது எதுவுமில்லை. இப்படிப்பட்ட கட்சிக்குள் கிடைக்க வேண்டிய - அன்பால் கிடைக்க வேண்டிய பதவிகளுக்கு - ஒத்துழைப்போடு கிடைக்க வேண்டிய பதவிகளுக்கு - நம்பிக்கையோடு கிடைக்க வேண்டிய பதவிகளுக்கு - நாலு பேர் சேர்ந்து இயக்கக்

கூடிய இந்த இயக்கத்தினுடைய பொறுப்புகளுக்கு நான் என் றைக்கும் போட்டியிட்டதில்லை. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால் இந்த இயக்கம் அப்படிப்பட்ட குடும்ப பாசத்திலே வளர்ந்த இயக்கம்.

பேரறிஞர் அண்ணாவிடத்திலே நாங்கள் பழகுகிற போது அண்ணா அவர்கள் எங்களிடம் அன்பு காட்டிய காரணத்தால் எவ்வளவு வேற்றுமை இருந்தாலும் அறிஞர் அண்ணா சொல் கிற போது கட்டுப்பட்டு நிற்போம். கட்டுப்படாதவர்கள் இந்த இயக்கத்திலே பணியாற்ற முடியாதவர்களாக ஆனார்கள்.

ஈ.வி.கே. சம்பத் அவர்களோ, அவர்களோடு போனவர் களோ அந்த நிலைமைக்கு அவர்களே ஆளானார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் இந்த இயக்கத்தைத் தொடங்கியபோது, எந்தத் தந்தை பெரியார் அவர்களால் நாம் உருவாக்கப் பட் டோமோ அந்தப் பெரியாரை மறந்துவிட்டு இந்த இயக்கத்தை உருவாக்கவில்லை. அறிஞர் அண்ணா அவர்கள் இந்த இயக் கத்தை நடத்துகிறபோது, மாறுபாடு கொண்டு விலகிய ஈ.வி.கே. சம்பத் அவர்களை அறிஞர் அண்ணா அவர்கள் மன தார விரட்டவில்லை. நீக்க நினைக்கவில்லை. சம்பத் எந்தக் கருத்து மாறுபாடு கொண்டிருந்தாலும் கூட, அந்தக் கருத்து மாறு பாடுகளுக்கு அப்பாற்பட்டு சம்பத்தையே தன்னுடைய இயக்கத் திலே இணைத்து வைத்துக் கொள்ளத்தான் விரும்பினார்.

சம்பத்திடம் சொன்னது என்ன?

''தோழர் சம்பத் அவர்களே, எங்களைவிட உனக்கு என்ன பெரிய தகுதி இருக்கிறது'' என்று நான் கேட்டேன். ''நான் எம்.ஏ. படித்துவிட்டு, பல மேடைகளில் பேசியதற்குப் பின் னால் உங்களை அழைத்து தில்லை தமிழ்க் கழகத்திலே பேச வைத்தேன். அறிஞர் அண்ணாவிடத்திலே இருக்கிற நெருக்கம் காரணமாக, நீ இவ்வளவு உரிமை கொண்டாடுவானேன்? அது எப்படி ஜனநாயகம்? அறிஞர் அண்ணா எழுதுகிற எழுத்துக்கு பதில் எழுத தயாராகிறாயே, அது இந்தக் கழகத்தைக் கெடுப்ப தல்லவா? உனக்கு அந்த உரிமை இருக்குமானால் எங்களுக்கும் அதே உரிமை இருக்கும். உன்னுடைய பேச்சுக்கு நாங்கள் பதில் சொல்லக் கூடாதா? அப்படிப்பட்ட உணர்வு இந்த இயக்கத் திலே வரலாமா? சம்பத் அவர்களே, நீங்கள் என்னைவிட

இளைஞர். இந்த இயக்கத்திலே உங்களைவிட எனக்கு அதிக நாள் பயிற்சி இருக்கிறது. நான் இப்பொழுது சொல்கிறேன். அண்ணாவுக்காக அல்ல. ஒரு கட்சி என்பதற்காகச் சொல்கி றேன். இந்த இயக்கத்திலே கட்டுப்பட்டு இருப்பதாக இருந்தால் உங்களை நான் வரவேற்கிறேன். நீங்கள் ஏற்று இருக்கிற பொறுப்புக்கு எந்தப் போட்டியும் கிடையாது. கட்டுப்பட முடி யாது என்றால், கூட்டுவிட்டது என்று விலகிச் செல்லுங்கள்'' என்று நான் சொன்னேன்.

அறிஞர் அண்ணா அதற்குப் பின்னால் அந்த அடிப்படை யிலே கழகக் கட்டுப்பாட்டின் அவசியத்தை விளக்கிப் பேசி னார். அதற்குப் பிறகு சம்பத் அவர்கள் அன்பழகன் பேசியதற் குப் பின்னர் அந்த விளக்கத்தை நான் முழுவதுமாக மறுக்க விரும்பவில்லை. இந்த இயக்கத்தில் இருந்து பணியாற்ற முடி யாத நிலைக்கு ஆளாகிவிட்டேன் என்று விலகினார்.

யாரையும் விரட்டுவதற்காக இயக்கம் நடத்தவில்லை!

நாங்கள் யாரையும் விரட்டுவதற்காக இந்த இயக்கம் நடத்த வில்லை.

ஒரு சாதாரண இளைஞனாக இருந்தால்கூட, இன்றைக்கு இருபது வயது இளைஞனாக இருந்தால் கூட, விளம்பரமில்லா தவனாக இருந்தால்கூட அவனுடைய எண்ணத்தில் தி.மு.கழகக் கருத்து மெல்லப் பதிந்து அவன் நாற்பது வயதாகிறபோது இந்த நாட்டிற்குப் பயன்படமாட்டானா? அவனுடைய குடும்பம் இந்த இயக்கத்திற்கு ஆதரவாக இருக்காதா? இந்தக் கட்சி உணர்வு அவனுடைய உள்ளத்திலே பதியப் பதிய திராவிட இனம் என்று கருத மாட்டார்களா? அந்தத் தமிழ்க்குடி தமிழ் நாட்டை உயர்த்தாதா? அந்தக் குடும்பம் ஜாதி வேற்றுமையை மறக்கிற அளவிற்கு வளராதா? எனவே அப்படிப்பட்ட உணர்வு கள் மெல்ல மெல்லப் பயிராக வேண்டும் என்று விரும்புகிற இந்த இயக்கத்திலே இருக்கிற நாங்கள், கலைஞரோ, நானோ, முன்னணித் தேழர்களோ யாராக இருந்தாலும், இந்தப் பெரிய லட்சியத்தை மெல்ல மெல்லப் பதியச் செய்கிற அந்த ஆர்வத்து டனேயே இருக்கிற காரணத்தால், யாரையும் இழப்பதற்காக. யாரையும் விரட்டுவதற்காக செயற்படமாட்டோம். மேலும்

யாருடைய வளர்ச்சியைப் பார்த்தும் நானோ, கலைஞரோ பொறாமைப்படுவதாக, பயப்படுவதாக தயவு செய்து கருத வேண்டாம்.

என் வீட்டிலே வளர்த்த கன்றுகூட, ஏறத்தாழ அது வளர்ந்த நிலையிலே, அது வேகமாக நடந்து போகிற நடையிலேயே என்னைக் கீழே தள்ளிவிடும். அதற்காக வளர்த்த கன்றை நான் வெறுக்கமாட்டேன்.

என்னுடைய பிள்ளை என்னைவிட உயரம். நான் வெறுக்க மாட்டேன். என்னிடத்திலே படித்த மாணவர்கள் சிலர் என்னை விட அறிவாளிகளாக உயர்ந்திருக்கிறார்கள். அவர்களை நான் வெறுக்க முடியாது.

வரவேண்டிய காலத்திலே எந்த மாற்றமும் வரலாம்

இந்த இயக்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் சிலபேர் நல்ல புகழ்பெற்றுத் திகழ்கிறார்கள். நான் வெறுக்க மாட்டேன். அவர் களெல்லாம் சேர்ந்து அன்பழகன் மறைந்ததற்குப் பின்னால் இந்த இயக்கத்தை நடத்துவதைத்தான் நான் விரும்புவேன். கலைஞர் கூட ஒருநாள் மறையத்தான் நேரிடும் - மனிதர்கள் எவரும் ஒருநாள் பிறந்து வளர்ந்து இன்னொரு நாள் மறையத் தான் இருக்கிறார்கள். அப்படி மறைகிறவர்கள் தான் நாங்கள். நாங்கள் நிலையென்று கருதுவதற்கு நாங்கள் அறியாதவர்கள் அல்ல. நாங்களே நிலை என்று கருதுவதற்கு எங்களுக்கு 18 வயதல்ல. நாங்களே தான் என்றைக்கும் இந்த இயக்கத்தை நட த் தப்போகிறோம் என்று எண்ணிக் கொள்வதற்குப் பைத்தியக்கா ரர் அல்ல. மாற்றங்கள் வரும். வரவேண்டிய காலத்லே எந்த மாற்றமும் வரலாம்.

தேர்ந்து எடுக்கப்பட்ட பதவியில் கலைஞர்

என்னுடைய அன்புக்குரிய தோழர் ஒருவர் பேசும்போது ஆர்வத்திலே சொல்லியிருக்கிறார். இந்த இயக்கத்திலே எல்லாப் பொறுப்புக்களுக்கும் தேர்தல் உண்டு. தலைவர் பொறுப்புக் கும், பொதுச் செயலாளர் பொறுப்புக்கும் தேர்தல் கிடையாது என்று சொல்லியிருக்கிறார். அவர் என் மீது பற்று உள்ளவர்தான். அவருக்கு என்ன தோன்றுகிறதென்றால் தலைவருக்கும்,

பொதுச் செயலாளருக்கும் யாரும் போட்டியிடப் போவ தில்லை என்று. அப்படிச் சொல்லியிருக்கிறார். எங்களுடைய பதவிகளுக்கும் தேர்தல் உண்டு. கலைஞருடைய தலைவர் பத விக்கும் தேர்தல் உண்டு. புதிதாக உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு படிப்படியாக கிளைக்கழகம், ஒன்றிய, மாவட்டக் கழகங்கள் தேர்தல் எல்லாம் நடைபெற்று முடிந்து, தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுக்குழு உறுப்பினர் எல்லோரும் வந்து அமர்ந்ததற்குப் பின் னர் அந்த ஆயிரம் பேர் சேர்ந்து தேர்ந்தெடுக்கிற முறையிலே தான் கலைஞர் தலைவராக இருக்கிறாரே தவிர, அதேபோல் தேர்ந்தெடுத்துத்தான் நான் பொதுச் செயலாளரே தவிர, அவர் கள் தேர்ந்தெடுத்துத்தான் நண்பர் சாதிக் பொருளாளரே தவிர வேற வகையில் அல்ல. பிற பொறுப்புகளுக்குத் தேர்தல் வந்த தைப் போலத்தான் இந்தப் பொறுப்புகளுக்கும் தேர்தல் வந்து இந்தப் பதவிக்கு வந்திருக்கிறோம். நான் தேர்ந்தெடுக்கப்பட்ட வன். சற்று பெருமையோடு சொல்கிறேன். போட்டியில்லாமல் தேர்ந்தெடுக்கப்பட்டவன். இருக்கிற பொறுப்பை விட்டு விட்டு ஓடுவதற்கு நான் பைத்தியக்காரன் அல்ல என்பதையும் மற்றவர் களுக்கு நினைவூட்டுவதற்காகச் சொல்கிறேன்.

ஜனநாயக முறையை என்றைக்கும் மாற்றிவிட மாட்டோம்

மறுபடியும் தேர்தல் வரட்டும். வரவேண்டிய காலத்திலே வரும். ஏற்க வேண்டிய கடமையை நாங்கள் ஏற்போம். ஜனநா யக முறையை நாங்கள் என்றைக்கும் மாற்றிவிட மாட்டோம்.

தி.மு.கழகம் என்ற வேரிலேயே ஜனநாயகம் என்ற நீர்தான் பாய்ச்சப்படுகிறது. யாருக்காக இந்த இயக்கம்? ஜமீன்தார்களுக் காகவா? மிட்டா மிராசுகளுக்காகவா? ஆதிக்கம் செலுத்திய வர்க்கத்திற்காகவா? ஆண்டாண்டு காலம் நாங்கள்தான் பதவி யில் இருக்க வேண்டும் என்று சொல்கிற கூட்டத்திற்காகவா? அல்ல. இந்த நாட்டிலே வாழ்கிற ஐந்தரை கோடி மக்களுக்காக

இந்தத் தமிழ் மக்களுடைய உறவினர்களாக உற்றாராக உலக மெலாம் வாழ்கிற தமிழர்களுக்காக - மொத்தத் தமிழர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபடும் மையபீடமாகத்தான் தி.மு.கழகம் இருக்கிறது. இந்த இயக்கம் மக்களுக்காக இருக்கிற இயக்கம். கழக உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு மேல

மைப்புக்கு வருகிறவர்கள் நடத்தும் இயக்கம். அதிலே சில குறைகள் இருக்கலாம். எங்கே குறை இல்லை?

பெருந்தன்மை - பண்போடு இயக்கம் நடத்துகிறார், கலைஞர்

ஒரு இளைஞனுக்குத் திருமணம் நடக்கிறது. ஜோடிப் பொருத்தம் இருக்கிறது. எல்லோரும் பாராட்டுகிறார்கள். ஒரு பத்துநாள் ஆகிறது. அந்தக் காதலர்களுக்கு இடையிலேயும் கசப்பு வருகிறதா, இல்லையா? தாயை மதிக்கிறான் பிள்ளை, அங்கேயும் சில பிரச்சினை வருகிறதா இல்லையா? ஆக தகராறு, பிரச்சினை என்பது எல்லா இடத்திலேயும் உள்ளது. ஆனால் தி.மு.கழகத்திலே, அப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படாத அளவிற்கு, கண்ணியமாக, பெருந்தன்மையாக - இன்னும் சொல்லப் போனால் பண்போடு இந்த இயக்கத்தை நிர்வகித்து நடத்துகிற அந்த இடத்திலே உள்ளவர்தான் கலைஞர்.

எனவேதான் இந்த இயக்கத்தைப் பற்றித் தவறான கருத்துகள் வெளியிலே பேசப்படுமேயானால் நாடு அவ்வளவு எளிதாக ஏற்றுக் கொள்ளாது.

அவன் இருந்தாலும் ஒன்றுதான் இல்லையென்றாலும் ஒன்றுதான்

இந்த இயக்கத்திற்கு உயிராக இருப்பவர் கலைஞர். நான் அதைப் பெருமையோடு சொல்கிறேன். உயிர் என்று சொல்வதற்குக் காரணம் இந்த இயக்கத்தினுடைய ஓட்டம் அவரது சிந்தனை மூலமாகத்தான் உருவாகிறது. எனக்கும் அதே சிந்தனை இருக்கிறது. ஆனால் மறுநாள்தான் சொல்வேன். எனக்கு அவர் எழுத வேண்டிய எழுத்து என்னவென்று தெரியும். உட்கார்ந்து எழுதமாட்டேன். அவர் காலையிலே சொல்கின்ற கருத்தை மாலையிலே கூட்டத்திலே நான் பேசுவேன். எதற்குச் சொல்கிறேன் என்றால், அவருடைய சிந்தனை அதிலேயே உழல்கிறது. அப்படி ஒரு தலைவன் இந்தியாவிலேயே பிறக்கவில்லை. நான் அவரை தலைவர் என்று பாராட்டுவது, நான் அவரைப் பாராட்டி அவர் மகிழ வேண்டும் என்பதற்காக அல்ல. அவரது அருமை

பெருமையைப் புரிந்து தமிழ்நாட்டு மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான். அவரை விட திறமை யுள்ள ஒருவர் இருக்கிறார் என்றால் அவரைக் காட்டுங்கள். நான் அவருடைய முகவரியைத் தெரிந்து கொள்கிறேன். ஒருவேளை நான் இல்லையா என்று சிலர் கேட்பீர்கள். ஆனால் நானே நம்பு வது - என்னை விடக் கலைஞர் மிகவும் திறமையாகச் செயல்படு கிறவர் என்று நானே உணர்ந்துள்ள போது, அதைக் கூட உணர முடியாமல் இந்த இயக்கத்திலே ஒருவன் இருப்பானேயானால் அவன் இருந்தாலும் ஒன்றுதான்; இல்லையென்றாலும் ஒன்று தான்.

இந்த இயக்கத்தைக் கலைஞரைத் தவிர வேறுயாரும் கட் டிக் காப்பாற்ற முடியாது. இந்த இயக்கத்தைத் தவிர தமிழனுக் குத் தொடர்ந்து பணியாற்றக் கூடிய இயக்கம் வேறு இருக்க முடியாது. இன்னும் சொல்லப் போனால் தமிழனுக்கு ஒரு முன் னேற்றம், ஒரு வாழ்வு, ஒரு பெருமை தி.மு.கழகத்தால்தான் ஏற்பட முடியும். இந்தத் தமிழன் முன்னேற வேண்டும் என்று எண்ணாதவன் தமிழனல்ல.

கடிதம் வந்தது

கலைஞர் அவர்களுக்கு மாநில அரசிடமிருந்து கடந்த அக் டோபர் 3-ம் தேதி காலை ஒரு கடிதம் வந்தது.

அன்றைய தினம் கள்ளக்குறிச்சியிலே ஒரு திருமணத்திலே கலந்து கொண்டுவிட்டு, சென்னைக்கு வந்த நான் தற்செயலாக அலுவலகத்திலே போய் தபால்களை எடுத்துக் கொண்டு வீட் டுக்குப் போகலாமென்று எண்ணி, அலுவலகத்திற்குச் சென் றேன். கலைஞர் உள்ளே இருந்தார். கலைஞர் இருக்கிறாரே பார்த்துவிட்டுப் போகலாம் என்று எண்ணி உள்ளே சென்றேன். உள்ளே சாதிக் இருந்தார். ஆர்க்காடு வீராசாமி இருந்தார். என் னைப் பார்த்தவுடன் வழக்கமாக அவர்களிடம் ஒரு புன் முறுவல் இருக்கும். இல்லையானால் கைகூப்புவார்கள். அதுவெல்லாம் இல்லாமல் சோர்ந்து உட்கார்ந்திருந்தார்கள். ஆர்க்காடு வீரா சாமி சோர்ந்து இருக்க மாட்டார். அவரே சோர்ந்து இருந்தார். நான் போய் உட்கார்ந்து கொண்டு ஏதோ நடந்திருக்கிறது. யாரோ கழகத்திலே முக்கியமானவர்கள் தவறிவிட்டார்கள் போலிருக்கிறது. அதனால்தான் எல்லோருமே இப்படி இடிந்து

போய் வேதனையோடு இருக்கிறார்கள் என்று எண்ணியவனாய், அப்படி ஒரு துக்க நிலைமை என்று நான் பேசாமல் இருந்தேன்.

பாருங்கள் என்றார்

இரண்டொரு நிமிடம் கழித்து கலைஞர் கேட்டார், ''உங்களுக்குச் செய்தி தெரியுமில்லையா?'' என்றார். நான் 'தெரியாது' என்றேன். ''இந்தக் கடிதத்தைப் பாருங்கள்'' என்றார். அந்தக் கடிதத்தை நான் படித்துப் பார்த்தேன். ஓர் அதிர்ச்சிக்கு ஆளானேன்.

அந்தக் கடிதத்தைப் பாம்பென்று நம்பவும் முடியாது. பழுதென்று அலட்சியப்படுத்தவும் முடியாது. அந்தக் கடிதம் அப்படியே உண்மையென்று நான் நம்புவதற்கு முடியாவிட்டாலும் கூட, இப்படி ஒரு கடிதம் வந்திருக்கிற போது இந்த ஆபத்து கலைஞருக்கு வந்துவிடக் கூடாது என்று எண்ணாமல் இருந்தால் நான் மனிதத் தன்மை உள்ளவன் அல்ல.

முதல் கடமை பாதுகாப்பு

கலைஞர் உடனடியாக, ''என்ன செய்யச் சொல்கிறீர்கள்'' என்று என்னைக் கேட்டார். ''பத்திரிகையாளர்கள் கேட்டார்கள். பொதுச் செயலாளர் வரட்டும் கலந்து சொல்லலாம் என்று இருக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். என்ன சொல்கிறீர்கள்'' என்று கேட்டார். ''உடனே நீங்கள் பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு மாநில அரசுக்கு ஒப்புதல் தரவேண்டும்'' என்றேன். ''மற்றவர்கள் எல்லாம் என்ன சொல்வார்கள்'' என்று கேட்டார். ''என்ன சொல்லப் போகிறார்கள். ஆபத்து வரலாம். வராமல் போகலாம். ஆபத்து வரும் என்று மத்திய அரசே அஞ்சி அப்படி ஒரு நிலைமை இருக்கலாம்; அப்படி ஏற்படுவதற்கு யாரோ திட்டமிடுகிறார்கள் என்று சொல்கிறபோது முதல் கடமை பாதுகாப்பு. அரசாங்கம் தருகிற பாதுகாப்பு போதுமா? போதாதா? என்பது குறித்து நம்முடைய மாவட்டச் செயலாளர்களிடத்திலே கலந்து கொள்ளலாம். நம்முடைய முன்னணித் தோழர்களிடத்திலே கலந்து கொள்ளலாம். ஆனால் அரசாங்கம் தருகிற பாதுகாப்பை உடனடியாக ஏற்றுக் கொண்டாக வேண்டும்'' என்றேன். மாலையிலே தீர்மானிக்கலாம் என்றார்.

ஒரு முதலமைச்சராக இருந்த கலைஞருக்கு இன்றைய முத லமைச்சரிடமிருந்து தலைமைச் செயலாளர் மூலமாகக் கடிதம் வந்திருக்கிறது. மத்திய அரசு தெரிவித்த செய்தியாக.

ஆபத்து வந்தால்தான் அது ஊர்ஜிதம்

மத்திய அரசோ, மாநில அரசோ நம்மிடத்திலே பற்றுதல் வைத்திருக்கிற அரசு அல்ல. தங்கள் மீது பழிவந்துவிடக் கூடாது என்று, அந்தப் பழி வராமல் இருக்க வேண்டுமானால் 'செய் தியை முன்னால் கருணாநிதிக்குத் தெரிவித்து விடுவோம்' என்ற தெரிவித்து இருக்கிறார்கள்.

அப்படி அனுப்பப்பட்ட அந்தச் செய்தி, ஊர்ஜிதப் படாத செய்தி என்று ஆங்கிலத்திலே குறிப்பிடப் பட்டிருக்கிறதே என்று சில பேர் கேட்டார்கள். ஒருவர் உயிருக்கு ஆபத்து என்று செய்தி அனுப்ப வேண்டுமானால், அது ஊர்ஜிதப்பட்ட செய்தி என்று அனுப்பமாட்டார்கள். எப்பொழுது ஊர்ஜிதம் ஆகும் என்றால் ஆபத்து வந்தால்தான். அதுவரையில் அது ஊர்ஜிதப் படாத செய்தியாகத்தான் கூறப்படும்.

கலைஞர் யாரையும் குற்றம் சாட்டவில்லை.

ஆனால் அந்தச் செய்திக்கு முக்கியத்துவம் உண்டு என்பது, மத்திய அரசாங்கத்தின் உள்துறை இலாகாவிலே இருந்து மாநில அரசாங்கத்துக்கு அனுப்பப்பட்டு, இங்கே உள்ள தலைமைச் செயலாளர் அனுப்புகிற அந்தச் செய்தி ஊர்ஜிதப்படாத செய்தி என்றாலும், கலைஞருக்கு ஆபத்து வரக்கூடும், அதை யாரோ திட்டமிடக் கூடும் என்பதும், அந்த அளவுக்கு உண்மை என்ப தும் யாரும் மறுக்க முடியாதது. ஆகவேதான் முதலில் தோழர் களை எல்லாம் கலந்து பேசிய போது, மாவட்டச் செயலாளர்க ளையும் கலந்து பேசலாம் என்று அழைக்கப்பட்டு அவர்களும் வந்தார்கள். முன்னாலேயே பலபேர் வந்துவிட்டார்கள். சில பேர் அழைப்புப் பெற்று வந்தார்கள். எல்லோரும் கலந்து பேசு கிற போது அவரவர்களுக்குத் தோன்றிய சில எண்ணங்களைத் தெரிவித்தார்கள்.

கலைஞர் அவர்கள் பத்திரிகை நிருபர்களை சந்தித்துப் பேசு கிறபோது எந்த இடத்திலேயும், யாரையும் அவர் குற்றம் சாட்ட

வில்லை. ஒரு நிருபர் கூட கேட்டார், ''விடுதலைப் புலிகள் உங்களுக்கு விரோதமானவர்கள் அல்லவே, உங்களிடத்திலே பகை கொள்ளக் காரணம் இல்லையே? அவர்களாலா ஆபத்து?'' என்று.

எனக்கும் அவர்களுக்கும் பகை கிடையாது. இந்த கடிதத் திலே உள்ள விபரத்தையே பார்த்துக் கொள்ளுங்கள். பகையில் லாவிட்டால் கூட அவர்கள் செய்வார்களா? செய்யமாட்டார் களா? என்பது வேறு கேள்வி. ஆனால் கலைஞர் சொல்கிற போது பகை இல்லை என்றே சொல்லிவிட்டார். இதற்குப் பின் னர் ஏற்பட்ட சூழ்நிலையில், ஏதோ கலைஞர் பெரிய பழி ஏற்ப டும்படிச் சொல்லி விட்டதாக ஒரு குறை கூறப்படுகிறது. மாவட் டச் செயலாளர்கள் அத்தனைபேரும், கலைஞர், அரசுதரும் பாது காப்பு ஏற்பாட்டை ஒத்துக் கொள்ள வேண்டும் என்றே தெரிவித் தனர். மாவட்டச் செயலாளர்களிலே சிலபேர் ஒருவேளை இந் தக் கடிதத்தில் இருப்பது போல் கலைஞர் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்ற கவலையில் சில கருத்துகளைத் தெரி வித்தனர்.

பத்திரிகை உலகம் செய்த தவறு மிகப் பெரியது

யாரும் எந்த முடிவும் அந்தச் செயற்குழுவிலே எடுப்பதாக இல்லை. நான் பேசுகிறபோது யாரையும் குற்றம் சாட்ட வில்லை. கலைஞர் பேசுகிற போதும் குற்றம் சாட்டவில்லை. இந்தச் சூழ்நிலை ஏற்பட்டதை விளக்கிய இரண்டு பேர் சில குற்றம் குறைகள் தோன்றும்படிப் பேசினார்கள். இரண்டு பேர் அப்படிக் கருதஇடமில்லை என்று பேசினார்கள்.

ஆக, அப்படி ஒரு கருத்துப்பரிமாற்றம் ஏற்பட்ட காரணத் தால் உங்கள் கருத்துகளை எழுதிக் கொடுங்கள். பின்னால் தேவைக்கேற்ப யோசித்துக் கொள்ளலாம் என்று சொல்லி எழுதி வாங்கினோம். இடையிலே பரப்பப்பட்ட செய்திகளி னால் ஏற்படுத்தப்பட்ட தவறான எண்ணங்களையும், குற்றச் சாட்டுக்களையும் கூர்ந்து நோக்கினால் உள்ளபடியே இந்த இயக்கத்திலே உள்ளவர்கள் செய்த தவறைவிட - பத்திரிகை உலகம் செய்த தவறு மிகப்பெரியது என்பது தெளிவாகும்.

அந்தப் பத்திரிகைகள் இந்த இயக்கத்திலே உள்ள முன்ன ணித் தோழரை ஒழிப்பதற்கு, தி.மு.க. திட்டம் தீட்டுவதாக, நீக்கப் போவதாக, அப்படி நீக்கப் படுவதை எதிர்ப்பதாக, யாரும் ஏற்றுக் கொள்ளாததாக - எதிர்ப்பு வளர்வதாக - இப்படிப் பல எண்ணங்களைப் பத்திரிகைகள் அவர்களுக்குக் கிடைத்த தகவலைக் கொண்டு அவர்களுக்குத் தரப்பட்ட செய்திகள், அவர்களிடத்திலே சேமிக்கப்பட்ட செய்திகள், அவர்களிடத்திலே பல்வேறு விதமாக உருவாக்கப்பட்ட செய்திகளைக் கொண்டும் தமிழ்நாட்டில் ஒரு தவறான எண்ண ஓட்டம் ஏற்படுத்த வழி செய்துள்ளன. தி.மு.கழகம் யாரையோ பழிவாங்கப் போவ தாக, அதிலே ஏதோ கலைஞர் ஆர்வமாக இருப்பதைப் போல, இன்னும் சொல்லப் போனால் கலைஞர் அவர்கள் பொன்முடி யோடு போராட வேண்டிய ஒரு கட்சித் தோழரைப் போல, செல்வராஜுவோடு போராட வேண்டிய ஒரு கட்சித் தோழரைப் போல பத்திரிகைகள் இந்தச் செய்திகளைப் பெரிதுபடுத்தின.

நாங்கள் யாரையும் இழக்கவோ
ஒழிக்கவோ எண்ணவில்லை.

கலைஞர் அவர்கள் இரண்டு நாட்களுக்கு முன்பு வெளி யிட்ட அறிக்கையைப் பார்த்தாலும் தெரியும். நான் அதற்கு முன் னர் வெளியிட்ட அறிக்கையைப் பார்த்தாலும் தெரியும். நாங்கள் யாரையும் இழக்கவோ, ஒழிக்கவோ எண்ணிட அவசியம் இல்லை. யாரும் எங்களைவிடப் பொறுப்பானவர் தி.மு. கழகத்திலே இல்லை. சிலபேரை ஒழித்துவிட்டுத்தான் இந்த இயக்கத்தை நடத்த முடியும் என்ற இடத்தில் நாங்கள் இல்லை. நாங்கள் ஆற்றிய பணியோ, தொண்டோ அவ்வளவு சாமான்ய மானதல்ல.

இந்த இயக்கத்திலே பதவி இல்லாமல், பதவிபெறாமல் பாடுபட்டவர்கள். பல்லாயிரம் பேர், பல லட்சம் பேர் இருக்கி றார்கள். எனவே இந்த இயக்கத்திலே இருக்கிற ஒரு தியாகியைப் பார்க்கிறபோது, அந்த தியாகியை நீங்கள் ஆயிரம் பாராட்டுங் கள். ஆனால் அவரைப் போல் இன்னொரு தியாகிஇல்லை என்று கருதாதீர்கள். ஒரு நல்ல பேச்சாளரைப் பார்க்கிற போது பாராட்டுங்கள். அவரைப்போல் பேச இன்னொரு பேச்சாளர் இல்லை என்று கருதாதீர்கள். எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.

ஏடுகளில் செய்தி போட்டு இந்த இயக்கத்தை ஒழித்துவிட முடியாது

இந்த இயக்கம் மிகச் சாதாரண இயக்கம் அல்ல. நாலு பேர் நினைத்தால் முடித்துவிடக் கூடிய இயக்கம் அல்ல. இரண்டு ஏடுகளிலே தொடர்ந்து செய்தி போட்டு, இந்த இயக்கத்திற்கு முடிவு கட்டிவிட முடியாது. இன்னும் பத்துத் தேர்தலிலே தோற் றாலும் தி.மு.கழகம் தலை நிமிர்ந்து நிற்கின்ற இயக்கமாகத்தான் இருக்கும். கலைஞருக்கும், அன்பழகனுக்கும் இனி வாழ் நாளிலே பதவி தேவையில்லை. யார் வேண்டுமானாலும் எங்க ளைச் சந்தியுங்கள் என்று சவால் விடக் கூடிய அளவிற்கு இந்த இயக்கம் வலிவோடு இருக்கத்தான் செய்யுமே தவிர, அழிந்து விடாது.

இவ்வளவையும் நான் சொல்வது - தி.மு.கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் சொல்வது - இந்த இயக் கம் கலைஞருக்காகவோ, எனக்காகவோ அல்லது கலைஞரு டைய குடும்பத்துக்காகவோ அல்ல. கலைஞருடைய மகனுக்கு பட்டாபிஷேகம் செய்வதற்காக இல்லை. முரசொலி மாறனுக்கு பதவி தேடித் தருவதற்காக இல்லை. அறக்கட்டளை சொத்தை வைத்து கலைஞர் வாழ வேண்டியவரல்ல. முரசொலியைப் பல கோடி ரூபாய்க்கு அறக்கட்டளைக்கு விற்றுவிட்டு அதிலே உண்டு வாழ்கிறவர் அல்ல கலைஞர். அவரைப் பாராட்ட வேண் டிய கட்டாயம் இல்லை எனக்கு. உண்மையை உணர்ந்தவன் என்பதால் நான் உரைக்கின்றேன்.

யாருக்கும் பட்டம் சூட்டும் காரியத்தில் ஈடுபடவில்லை

நாலுபேர் கூடிக் கூறுகிற நியாயத்தை என்றைக்கும் ஏற்றுக் கொண்டவர் கலைஞர். கோபால்சாமியோ, எல்.கணேசனோ, அல்லது நமது வீரபாண்டி ஆறுமுகமோ, செஞ்சி ராமச்சந்தி ரனோ, யாராக இருந்தாலும் சில கருத்து வேற்றுமை இருந்தா லும், சில வருத்தம் இருந்தாலும் என்னிடத்திலே எந்த அளவு உரிமையோடு அவர்கள் பேச முடியுமோ அந்த உரிமையோடு கலைஞரிடத்திலும் பேசும் பழக்கமடையவர்கள்தான். அப்ப டிப் பேசிய பல நேரங்களில் கலைஞர் அவற்றை மனதார ஏற்றுக்

கொண்டவர்தான். எனவே யாரையும் நாங்கள் வெறுக்க, யாரையும் ஒழித்துவிட்டு யாருக்கோ சலுகை காட்ட, யாருக்கும் பட்டம் சூட்ட, யாருமே அப்படிப்பட்ட காரியத்திலே ஈடுபடவில்லை என்பதை உறுதியாகக் கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

50 ஆண்டுக்கு மேலுமா சோதனை?

நான் உங்களையெல்லாம் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். ஒரு மனிதனுடைய பொதுத் தொண்டிலே உள்ள உண்மைக்கு 50 ஆண்டுகளுக்கு மேலுமா சோதனை? ஒருவருடைய தியாகத்திற்கு தொண்டுக்கு இதுவா பரிசு? அதுவும் முதலமைச்சராக இல்லாமல் 13 ஆண்டுக் காலம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்ததற்குப் பின்னாலுமா இந்தச் சோதனை?

ஆனால் யாரும் வரம்பு மீறிப் போய், எல்லை மீறிப் போய், சொல்லாததைச் சொன்னதாக பத்திரிகைகளில் வந்த செய்தி என்று அவரவர்களாக தங்களுக்குத் தாங்களே ஒரு எல்லை கட்டிக் கொண்டு விடுவார்களேயானால் நாங்கள் அதைத் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது. தி.மு.கழகத்தின் ஒற்றுமைக்கு, பொதுநல நோக்கத்திற்கு உறுதுணையாக நீடிக்க விரும்பாத நிலைமை யாருக்காவது ஏற்பட்டால் அது அவர்களுடைய விருப்பம். ஆனால் அந்த விருப்பம் நாட்டுக்கும் நல்லதாகாது; வீட்டுக்கும் நல்லதாகாது. எனவே எல்லோரையும் நான் அழைக்கிறேன். தி.மு.க. என்னும் தமிழர் இயக்கத்தைக் காப்பாற்றுங்கள். கலைஞர் கரத்தை வலுப்படுத்துங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.



